இனிய தமிழைப்

# பிழையின்றி எழுத எளிய வழிகள்

முனைவர்
இரா. திருமுருகன்

# இனிய தமிழைப்
# பிழையின்றி எழுத
# எளிய வழிகள்

முனைவர் இரா. திருமுருகன்

பாவலர் பண்ணை
60, மறைமலை அடிகள் சாலை
புதுச்சேரி –605 001.

| | |
|---|---|
| முதற் பதிப்பு | : ஆகத்து 2001 |
| விரிவாக்கிய பதிப்பு | : மார்ச்சு 2005 |
| உரிமை | : ஆசிரியர்க்கு |
| பக்கம் | : 64 |
| விலை | : உருபா 17.00 |
| கிடைக்குமிடம் | : பாவலர் பண்ணை<br>60, மறைலை அடிகள் சாலை<br>புதுச்சேரி – 605 001. |
| ஒளியச்சு | : பாவலர் பண்ணை ஒளியச்சகம்<br>60, மறைமலை அடிகள் சாலை<br>புதுவை – 605 001. |
| அச்சிட்டோர் | : அன்னை அருள் மறுதோன்றி<br>அச்சகம்<br>80, தியாகராசர் தெரு,<br>புதுச்சேரி – 605 001.<br>பேசி : 2336204. |




# என்னுரை

தாய்த்தமிழ்ப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர் களுக்குக் கல்பாக்கம், செஞ்சி, பல்லடம் ஆகிய விடங்களில் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன. பயிற்சி யளிப்பதற்கு நானும் பேராசிரியர்.ம.இலெ. தங்கப்பா அவர்களும் புதுவையிலிருந்து அழைக்கப்பட்டிருந்தோம். தமிழ் கற்பித்தலில் பயிற்சியளிக்கும் பணி எனக்குத் தரப்பட்டது. மழலையர்க்குத் தமிழ் கற்பிப்பது எப்படி என்பதை அறிந்து கொள்ளும் நோக்கத்தைவிடத் தங்களின் தமிழறிவை உயர்த்திக் கொள்ளும் நோக்கமே ஆசிரியர்களிடம் மிகுதி யாயிருந்தது. எனவே இரண்டு நோக்கமும் நிறைவேறும் வண்ணம் பயிற்சி தர வேண்டி யிருந்தது. அதற்கேற்றபடி வேண்டிய குறிப்புகளை எடுத்துச் சென்றேன்.

'கல்வி கரையில; கற்பவர் நாள் சில' என்றபடி சொல்ல வேண்டியவை நிறைய இருந்தன. உள்ள நேரமோ குறைவாயிருந்தது. மொத்தத்தில் 2 அல்லது 3 மணி நேரம் மட்டுமே எனக்குக் கிடைத்தது. அதனால் என் முயற்சி ஆனையைப் பானையில் அடைப்பதாக இருந்ததை அனை வரும் அறிந்தனர். சில செய்திகளை விரைந்து சொல்லிச் செல்ல வேண்டியிருந்தது; சிலவற்றை விளக்கமின்றிச் சுருக்கிச் சொல்ல நேர்ந்தது; பலவற்றை விட்டுவிடவும் நேர்ந்தது.

பல்லடத்தில் நடந்த பயிற்சி வகுப்பின் முடிவில் "நான் கொண்டு வந்த குறிப்புகளை ஊருக்குப் போய் ஒளியச்சிட்டு அனுப்புகிறேன். படியெடுத்துப் பயன் படுத்திக் கொள் ளுங்கள்" என்று கூறினேன். இதை அனைவரும் மகிழ்ச்சி யுடன் வரவேற்றனர்.

எனவே என் குறிப்புகளை அவர்களுக்காக ஒளியச்சிட முயன்றபோது, அவற்றை மேலும் சற்று விளக்கமாக்கியும், வேறு சில செய்திகளைச் சேர்த்தும் எழுதினால் நல்லது என்று பட்டது. அப்படிச் செய்ததன் விளைவே இக்கையேடு. 4 பக்கங்களில் அடங்கியிருந்த குறிப்புகள் 50 பக்கங்களுக்கு மேலான நூலாக விரிந்தன.

தாய்த்தமிழ்ப் பள்ளிகளில் மட்டுமன்றித் தொடக்க வகுப்புகளில் – ஏன்? உயர்வகுப்புகளிலும் –தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்கள் அறிந்து பயன் கொள்ளத்தக்க செய்திகள் இந்நூலில் அடங்கியுள்ளன என்றே கருதுகின்றேன்.

தமிழ் எழுத்துத் திறனை வளர்த்துக் கொள்ளும் வாய்ப்பில்லாத நிலையில், பள்ளியோடு படிப்பை முடித்துப் படைப்புப் பணியைத் தொடங்கிவிட்ட இன்றைய எழுத்தாளர் பலர்க்கும் இதில் உள்ள இலக்கணச் செய்திகள் பெருந்துணை செய்யும்.

பயிற்சி வகுப்பில் கூறிய அனைத்தும் பயன் மிக்கனவாக இருந்தது கண்ட ஆசிரியப் பெருமக்கள் அவற்றை ஆர்வத்துடன் குறித்துக் கொண்டனர் என்றாலும், எங்கே ஒற்று மிகும்? எங்கே மிகாது? என்பதைத் தெரிந்துகொள்வதில் அவர்கள் மிகுதியாக ஆர்வம் காட்டினர். தமிழில் எத்துணை உயர் பட்டங்களைப் பெற்றவர்க்கும் இந்தப் புணர்ச்சி விதிகளில் போதிய தெளிவு ஏற்படுவதில்லை. இதற்கு நமது தமிழ்க்கல்வி முறையே காரணமாகும்.

எழுத்திலக்கணமே புணர்ச்சியிலக்கணத்தைக் கூறுவதை நோக்கமாகக் கொண்டது தான். புணர்ச்சி





விதிகளை எடுத்துக்காட்டுகளுடன் விளக்கிக் கற்பிக்கவும், பல முறை பயிற்சியளிக்கவும் செய்து அற்றை இயல்பூக்கமாக வளர்க்காவிட்டால் இலக்கணக் கல்வியால் எந்தப் பயனும் விளையாது. ***பிழையின்றி எழுதுதல் என்பது அறிந்து கொள்ள வேண்டிய அறிவு அன்று; வளர்த்துக் கொள்ள வேண்டிய திறன் ஆகும்.***

மேற்குறித்த பயிற்சி வகுப்புகளில் இத்திறனை வளர்க்க வாய்ப்பில்லை. பலவாக உள்ள புணர்ச்சி விதிகளில் இன்றியமையாத சிலவற்றை மட்டும் இந்நூலில் தந்திருக்கிறேன். புணர்ச்சியிலக்கணப் பரப்பில் உள்ள எத்தனையோ செய்திகள் இதில் 25 விதிகளில் அடக்கிக் கூறப்பட்டுள்ளன. அவற்றில் இன்றைய நிலைக்குத் தேவையான கிலோ, மில்லி முதலிய சொற்களின் புணர்ச்சிகளும் அடங்கியிருக்கக் காணலாம்.

இதில் கூறப்பட்ட புணர்ச்சி விதிகள் பெரும் பான்மை பற்றியன. ஒவ்வொன்றிலும் விதி விலக்குகள் மிகச்சில இருக்கலாம். விதிகள் அனைத்தும் உரைநடை வடிவிலேயே சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன. செய்யுள் வடிவ நூற்பாக்களைக் கற்குமாறு எங்கும் வற்புறுத்தவில்லை. இவ்விதிகளைப் பொருளுணர்ந்து ஊன்றிக் கற்றுப் பலமுறை பயிற்சி செய்து இயல்பாக்கிக் கொண்டு பயன் பெறுக.

நமது இனிய தமிழைத் திருத்தமாக எழுத எளிய முறையில் கற்றுக் கொள்ள விரும்பும் எல்லோருக்கும் பயன்படும் வகையில் எழுதப்பட்ட இச்சிறு நூலைத் தமிழுலகம் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று விழைகிறேன். இந்நூல் மேலும் செம்மை பெற உரிய

கருத்துரைகளை உதவுமாறு அறிஞர்களை வேண்டுகிறேன்.

ஸுப்ரஜா, ஷில்பா, ஷ்யாம், ராஜேஷ் என்பன போன்ற பெயர்களை விரும்பித் தம் பிள்ளைகளுக்கு வைத்து மகிழும் 'தமிழர்கள்' எங்கும் பெருகி வரும் இந்தக் காலத்தில், அவற்றைத் தமிழா? பிறமொழியா? என்று தெரியாமலேயே சூட்டுவோரும் இருக்கிறார்கள். நல்ல தமிழ் நெஞ்சினர் சிலர், தமிழறிஞர்களைக் கேட்டுத் தம் மக்களுக்கு இனிய தமிழ்ப் பெயரை இட்டழைக்கின்றனர். இத்தகையோர்களுக்கு உதவும் வண்ணம் இந்நூலின் இறுதியில் 'குழந்தைகளுக்கான கொஞ்சு தமிழ்ப் பெயர்கள்' என்ற பகுதி சேர்க்கப்பட்டுள்ளது.

இவ்விரண்டாம் பதிப்பில் உரிய திருத்தங்களும் விரிவாக்கமும் மேற்கொள்ளப்பெற்றன. அதனால் மேலும் சில பக்கங்கள் கூடிவிட்டன.

இக்கையேடு உருவாகக் காரணமாயிருந்த தாய்த் தமிழ்ப் பள்ளி மேலாண்மைத் தாளாளர்கள் பல்லடம் திரு ந. முத்துக்குமரன், செஞ்சித் திரு வ. நா. தன்மானன், திரு திருநாவுக்கரசு, கல்பாக்கம் முனைவர் த. செங்கதிர், திரு முத்து ஆகிய பெருமக்களுக்கும், அழகிதாக அச்சிட்டுத் தந்த அன்னை அருள் மறுதோன்றி அச்சகத்தார்க்கும் நன்றியுடையேன்.

இரா. திருமுருகன்
1. 3. 2005

'ஏழிசைச் சூழல்'
62. மறைமலை அடிகள் சாலை,
புதுச்சேரி – 605 001.
பேசி : 9345414749, 0413 – 2201191.



## உள்ளே

| | | பக்கம் |
|---|---|---|
| 1. | சில எழுத்துகளின் பெயர்கள் | 8 |
| 2. | சில எழுத்துகளைப் பலுக்கும் முறை | 8 |
| 3. | பொருள் வேறுபாடுள்ள ரகர றகரச்சொற்கள் | 9 |
| 4. | ரகர றகர வேறுபாடின்றி வழங்கும் சொற்கள் | 11 |
| 5. | பொருள்வேறுபாடுள்ள லகர ளகர ழகரச்சொற்கள் | 11 |
| 6. | வேறுபாடின்றி வழங்கும் ளகர ழகரச் சொற்கள் | 12 |
| 7. | பொருள் வேறுபாடுள்ள நகர னகரச் சொற்கள் | 12 |
| 8. | மொழி முதல் எழுத்துகள் | 13 |
| 9. | மொழி இறுதி எழுத்துகள் | 13 |
| 10. | மொழி இடையில் எழுத்துகள் அமையும் முறை | 13 |
| 11. | குற்றியலுகரம் | 15 |
| 12. | சொல் வகை | 16 |
| 13. | வேற்றுமை உருபுகள் | 18 |
| 14. | தொடர்கள் | 18 |
| 15. | தொகைகள் | 19 |
| 16. | புணர்ச்சி விதிகள் | 20 |
| 17. | இன்றியமையாத புணர்ச்சி விதிகள் | 21 |
| 18. | வலி மிகும் இடங்களிற் சில | 22 |
| 19. | வலி மிகா இடங்களிற் சில | 23 |
| 20. | மேலும் சில புணர்ச்சி விதிகள் | 25 |
| 21. | பிழையாக வழங்கப்படும் சில சொற்களின் திருத்தமான வடிவங்கள் | 26 |
| 22. | போலிகள் | 30 |
| 23. | அயற்சொல் – தமிழ்ச்சொல் | 31 |
| 24. | அடிக்கடி வழங்கப்படும் சில ஆங்கிலச் சொற்கள் தமிழ்ச் சொற்கள். | 38 |
| 25. | குழந்தைகளுக்கான கொஞ்சுதமிழ்ப் பெயர்கள் | 54 |

# இனிய தமிழைப் பிழையின்றி எழுத எளிய வழிகள்

**1. சில எழுத்துகளின் பெயர்கள்**

ன – இருசுழினகரம் அல்லது றன்னகரம்
ண – முச்சுழிணகரம் அல்லது டண்ணகரம்
ந – தந்நகரம்
ற – வல்லின றகரம்
ர – இடையின ரகரம்
ழ – சிறப்பு ழகரம்
ல – நுனிநா லகரம்
ள – மடி நா ளகரம்

**2. சில எழுத்துகளைப் பலுக்கும் [உச்சரிக்கும்] முறை:**

ண, ள, ட – ஆகியவை மடிநா ஒலிகள். இவற்றைப் பலுக்க, நாக்கை மேல் நோக்கி மடித்து மேல்வாய்ப் பகுதியில் வருட வேண்டும்.

ன, ல, ற – ஆகியன நுனி நா ஒலிகள். இவற்றைப் பலுக்க, நாக்கு நுனியால் மேல்வாய்ப் பகுதியைத் தொட வேண்டும்.

த, ந – ஆகியவை மேற் பல்லின் அடியில் நாக்கு நுனி பொருந்தப் பிறக்கும்.

இவ்வெழுத்துகளை ஒன்றுக்கொன்று வேறுபட ஒலிக்கும் முறையைத் தொடக்க நிலையிலேயே தெளிவாகக் கற்பிக்க வேண்டும்; பலமுறை பலுக்கச் செய்து பயிற்ற வேண்டும்.

கண்ணி – கன்னி, புளி – புலி, என்பன போன்ற





சொற்கள் பொருள் வேறுபாடு உடையவை. "பறவையைக் கன்னி வைத்துப் பிடித்தான்" என்றும், கடைக்குப் போய் "ஒரு கிலோ புலி கொடு" என்றும் பேசுவது நகைப்புக்கு இடமாகும். ற் என்ற எழுத்தைச் சிலர் ர் என்பது போல் ஒலிக்கிறார்கள். அதனால் பயிற்சி, முயற்சி என்ற சொற்களை அவர்கள் பயிர்ச்சி, முயர்ச்சி என்று ஒலிக் கிறார்கள்; எழுதுகிறார்கள். தொடர்ச்சி, கவர்ச்சி என்ற சொற்களையும் தொடற்சி, கவற்சி எனப் பிழைபட ஒலிக் கிறார்கள்; எழுதுகிறார்கள். அங்கயற்கண்ணி என்ற பெயரை அங்கயர்க்கண்ணி என்றும், மங்கையர்க்கரசி என்ற பெயரை மங்கையற்கரசி என்றும் எழுதுவது இத்தகைய பிழையே.

மொழி முதலில் வரும் ச் என்ற எழுத்தை S என்பது போல் ஒலித்தல் பிழை. Ch என்பது போல் வல்லொலி யாகவே ஒலிக்க வேண்டும். சென்னை என்பதை Sennai என்று ஒலிப்பது பிழை. Chennai என்றே ஒலிக்க வேண்டும்.

குற்றம் என்பதைக் குட்றம் என்று ஒலிப்பது பிழை. குண்டு என்பதை Gundu என்றும், கும்பல் என்பதை Gumbal என்றும், கும்மிருட்டு என்பதை Gum இருட்டு என்றும், கூடுவாஞ்சேரி என்பதை Gooடுவாஞ்சேரி என்றும், குளு குளு என்பதை Gulu Gulu என்றும் ஒலிப்பது பிழை. [இங்கெல்லாம் மொழிமுதலில் K என்ற ஒலி வரவேண்டும்] தகப்பனார் என்பதை Dhahappanarஎன்றும் ஒலிப்பது பிழை. [இங்கே மொழிமுதலில் Th என்ற ஒலி வரவேண்டும்]

***3. பொருள் வேறுபாடுள்ள ரகர றகரச் சொற்கள் :***

**அரம்** [ஒரு கருவி] – **அறம்** [தருமம்]
**அரி** [பழத்தை அரி] – **அறி** [தெரிந்து கொள்]
**அருகு** [அண்மை] – **அறுகு** [அறுகம்புல்]

| | |
|---|---|
| **அரை** (பாதி, இடுப்பு) | – **அறை** |
| **இரத்தல்** (பிச்சை எடுத்தல்) | – **இறத்தல்** (சாதல்) |
| **உரவு** (வலிமை) | – **உறவு** |
| **உரி** (தோலை உரி) | – **உறி** (கட்டித் தொங்க விடும் உறி) |
| **உரிஞ்சல்** (உராய்தல்) | – **உறிஞ்சல்** (உறிஞ்சிக் குடித்தல்) |
| **உரை** (சொல்) | – **உறை** (தலையணை உறை) |
| **எரி** (கொளுத்து) | – **எறி** (தூக்கி வீசு) |
| **கர** (மறை) | – **கற** (பால் கற) |
| **கரை** (குளக்கரை) | – **கறை** (களங்கம்) |
| **குரங்கு** | – **குறங்கு** (தொடை) |
| **குரவை**(ஒரு வகைக் கூத்து) | – **குறவை** (ஒரு வகை மீன்) |
| **குரைத்தல்** (நாய் ஒலித்தல்) | – **குறைத்தல்** |
| **கூரை** (வீட்டின் கூரை) | – **கூறை** (துணி) |
| **செரித்தல்** (செரிமானம் ஆதல்) | – **செறித்தல்** (திணித்தல்) |
| **சொரி** (பூச்சொரி) | – **சொறி** (சொறிந்து விடு) |
| **திரை** (அலை) | – **திறை** (வரி) |
| **நரை** | – **நறை** (தேன்) |
| **நிரை** (வரிசை) | – **நிறை** (எடை, நிரப்பு) |
| **பரவை** (கடல்) | – **பறவை** |
| **பரி** (குதிரை) | – **பறி** (பிடுங்கிக் கொள்) |
| **பாரை** (கடப்பாரை) | – **பாறை** |
| **பிரை** (பாலில் குத்துவது) | – **பிறை** (குறை நிலா) |
| **பொரி** (சோளப்பொரி, பொரியல் செய்) | – **பொறி** (இயந்திரம்) |





| | |
|---|---|
| **பொருக்கு** (பருக்கை) | – **பொறுக்கு** |
| **மரம்** | – **மறம்** (வீரம், பாவம்) |
| **மரி** (சா) | – **மறி** (தடு, ஆட்டுக்குட்டி) |
| **மரை** (மான்) | – **மறை** (மறைத்தல்) |
| **முருக்கு** (ஒரு மரம்) | – **முறுக்கு**(முறுக்குதல்) |
| **விரகு** (தந்திரம்) | – **விறகு** |
| **விரல்** | – **விறல்** (வெற்றி) |

## *4. ரகர றகர வேறுபாடின்றி வழங்கும் சொற்கள்*

காரல் – காறல், சுரண்டு – சுறண்டு, சுரீர் – சுறீர், சுருக்கென்று – சுறுக்கென்று, சுருசுருப்பு – சுறுசுறுப்பு, முரிதல் – முறிதல்.

## *5. பொருள் வேறுபாடுள்ள லகர ளகர ழகரச் சொற்கள்*

| | | |
|---|---|---|
| அலகு (அளவு) | அளகு (ஒரு பறவை) | அழகு |
| அலி | அளி (கொடு) | அழி |
| அலை | அளை (வளை) | அழை |
| ஆல் (ஆல மரம்) | ஆள் | ஆழ் |
| இலை | இளை | இழை |
| உலவு | உளவு | உழவு |
| ஒலி | ஒளி | ஒழி |
| கலி (பஞ்சம்) | களி (மகிழ்) | கழி |
| கலை | களை | கழை(மூங்கில்) |
| கிலி | கிளி | கிழி |
| சூல் (கருப்பம்) | சூள் (சபதம்) | சூழ் |
| தலை | தளை (கட்டு) | தழை |
| வலி | வளி (காற்று) | வழி |

| | | |
|---|---|---|
| வலை | வளை | வழை [ஒரு மரம்] |
| வால் | வாள் | வாழ் |
| விலா | விளா [ஒரு மரம்] | விழா |
| விலை | விளை | விழை [விரும்பு] |

## 6. வேறுபாடின்றி வழங்கும் ளகர ழகரச் சொற்கள்

இளிவு – இழிவு, குளறு – குழறு, சுளித்தல் – சுழித்தல், துளாய் – துழாய், பவளம் – பவழம்.

## 7. பொருள் வேறுபாடுள்ள நகர னகரச் சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| அந்நாய் | – அந்தநாய். | அன்னாய் | – அன்னையே! |
| இந்நகை | – இந்த நகை. | இன்னகை | – இனிய நகைப்பு |
| இந்நா | – இந்த நாக்கு. | இன்னா | –தீயவை |
| இந்நிலை | – இந்த நிலை. | இன்னிலை | –இனிய நிலை |
| இந்நீர் | – இந்த நீர். | இன்னீர் | – இனிய தன்மை |
| செந்நாய் | – ஒரு வகை நாய். | சென்னாய் | –போகின்ற நாய் |
| தந்நலம் | – தம்நலம். | தன்னலம் | – தன்நலம் |
| தேநீர் | – தேயிலைநீர். | தேனீர் | –தேன் கலந்த நீர் |
| நந்நூல் | – நம் நூல். | நன்னூல் | –நல்ல நூல் |
| முந்நாள் | – மூன்று நாள். | முன்னாள் | –முன்னைய நாள் |
| வெந்நீர் | – வெம்மையான நீர். | வெந்நீர் | – வெல்லும் தன்மை |

**நிறுவுநர்** என்பது ஓர் அமைப்பை **நிறுவுவோ**ரைக் குறிக்கும். **நிறுவனர்** என்பது நிறவனத்துக்கு உரியவரைக் குறிக்கும்.





## 8. மொழி முதல் எழுத்துகள்

மொழி முதலில் வரும் எழுத்துகள் : 12 உயிர், க ச த ந ப ம வ ய ஞ ஆகிய வரிசை உயிர் மெய்கள்.

மொழி முதல் வாராத எழுத்துகள் : மெய்கள், ஆய்தம், ங, ட, ண, ர, ல, ழ, ள, ற, ன ஆகிய வரிசை உயிர் மெய்கள்.

## 9. மொழி இறுதி எழுத்துகள்

மொழி இறுதியில் வரும் எழுத்துகள் : எகரம் ஒழிந்த 11 உயிர்கள், ஞ், ண், ந், ம், ன், ய், ர், ல், வ், ழ், ள் ஆகிய மெய்கள்.

மொழி இறுதில் வாராத எழு.த்துகள் : எ, க், ச், ட், த், ப், ற், ங்.

## 10. மொழி இடையில் எழுத்துகள் அமையும் முறை

1. க், ச், த், ப் ஆகிய மெய்களை அடுத்து அவற்றின் உயிர் மெய்களே [பக்கம், பச்சை, பத்து, கப்பல் என] வரும்; வேறு உயிர் மெய்கள் வாரா.[எனவே, வக்ரம், அக்டோபர், பத்மா, ஆச்ரமம், சுப்ரபாதம், செப்டம்பர் என்பன போல் வேறு உயிர் மெய்கள் வரும் சொற்கள் தமிழ்ச்சொற்கள் அல்ல.]

2. டகர வரிசை உயிர் மெய்கள் ட், ண் ஆகிய மெய்களை மட்டுமே அடுத்து [எட்டு, சண்டை] என வரும். [எனவே, ஆக்டர், சிலின்டர், விக்டர் என்பன போல் வேறு மெய்களை அடுத்து வருவன தமிழ்ச்சொல் அல்ல.]

3. றகர வரிசை உயிர்மெய்கள் ற், ன், ஆகிய மெய்களை மட்டுமே அடுத்து [வெற்றி, மன்றம்] என வரும். [எனவே, முட்றம், குண்றம் என்பன பிழை. உம்றா, பேட்றி போல்வன பிறமொழிச் சொற்கள்.]

4. ய், ர், ழ் என்ற மெய்களை அடுத்து க், ச், த், ப், ங், ஞ், ந், ம் ஆகிய மெய்கள் இரண்டு ஒற்றாக [பாய்ச்சு, ஈர்க்கு வாழ்த்து என்பன போல] வரும். [எனவே, கோர்ட்டு, பேர்ல் என்பன போல் வருவன தமிழ்ச்சொல் அல்ல]

5. ர், ழ் ஆகிய மெய்களை அடுத்து அவற்றின் வரிசை உயிர் மெய்கள் [ர் ர, ழ் ழி என்பன போல] வாரா.

6. தனிக்குறிலை அடுத்து ர், ழ் ஆகிய மெய்கள் [கர்மம், பழ்து என்பன போல] வாரா.

7. ல், ள், ன், ண் ஆகிய மெய்களை அடுத்து 'த' வரிசை உயிர்மெய்கள் [அஞ்சல் தலை, கால்தொழு, அல் திணை, வாள்தழும்பு, தோள்தோய், முள்+தீது, மான்தலை, காண்தொறும் என] நில்லா. [அஞ்சற்றலை, காறொழு, அஃறிணை, வாட்டழும்பு, தோடோய், முஃடீது, மான்றலை, காண்டொறும் எனத்] திரிந்தே வரும்

8. ல, ள, ன, ண ஆகிய மெய்களை அடுத்து 'ந' வரிசை உயிர்மெய்கள் [சொல் நிலை, வேல் நீண்டது, முள்நுனி, வாள் நீண்டது, முன் நாள், மான் நோக்கம், கண் நோய், தூண் நீண்டது என] நில்லா. [சொன்னிலை, வேனீண்டது, முண்ணுனி, வாணீண்டது, முன்னாள், மானோக்கம், கண்ணோய், துணீண்டது எனத்] திரிந்தே வரும்.

[புணர்ந்த சொற்களைப் பிரித்துப் பொருள் தெளியும் திறன் குறைந்த இக்காலத்தில் விதிப்படிச் சொற்களைப் புணர்த் தெழுதாமல் பல்நிலை, கண்நோய் அஞ்சல்துறை, மான்தலை என்பனபோல் பிரித்தே எழுதுவதை, அறிஞர் பலரும் வழுவமை தியாக ஏற்றுக்கொள்கின்றனர். ஆனால், அஞ்சல்த்தலை, வாள்த்தழும்பு என்று எழுதுவது பிழை.]

மொழி முதல், இறுதி, இடைகளில் இங்குக் கூறப்பட்ட மரபுகளுக்கு மாறாக வருவன பிழையான சொற்க ளாகவோ, பிறமொழிச் சொற்களாகவோ இருக்கும். பிறமொழிச் சொற்களை இனங்கண்டு கொள்ளவும் இவ்விதிகள் உதவும்.





**காட்டு :** லோபம், ராமன், யேசு, யுவதி ஆகியன மொழி முதல் எழுத்து மரபுக்கு மாறாயிருப்பதால் தமிழ்ச்சொற்கள் அல்ல.

அனாமத், செக், கேரட், கப் என்பன மொழியிறுதி எழுத்து மரபுக்கு மாறாக வருவதால் தமிழ்ச் சொற்களல்ல.

பக்தி, பத்மா, சப்தி, கில்டு, சால்றா, கோர்ட், சர்வ், பர்தா, வர்மா, சல்தி, கல்தா என்பன மேற்கூறிய மொழி இடை வரும் எழுத்து மரபுக்கு மாறாயிருப்பதால் தமிழ்ச் சொற்களல்ல.

## *11. குற்றியலுகரம்*

உண்டு என்ற சொல்லின் முதலில் உள்ள உகரம் முழுமையாக [ 1 மாத்திரை அளவு] ஒலிக்கும். இறுதியில் உள்ள டு என்பதில் உள்ள உகரம் ஒலியளவில் குறைந்து [1/2 மாத்திரையளவு] ஒலிக்கும். குறைந்து ஒலிப்பதால் அது குற்றியலுகரம் எனப்படும்.

பல மாத்திரையளவு எழுத்துகளைத் தொடர்ந்து சொற்களின் இறுதியில் வரும் கு, சு, டு, து, பு, று என்ற எழுத்துகளில் உள்ள உகரம் குறைந்து ஒலிக்கும். அதனால் அவை குற்றியலுகரம் எனப்படும்.

**சுக்கு** – இதில் கு என்பது க் என்ற வல்லெழுத்தைத் தொடர்ந்து வந்துள்ளது. எனவே இது **வன்றொடர்க் குற்றியலுகரம்.**

**பஞ்சு** – இதில் சு என்பது ஞ் என்ற மெல்லெழுத்தைத் தொடர்ந்து வருவதால் **மென்றொடர்க் குற்றியலுகரம்.**

**செய்து** – ய் என்ற இடையெழுத்தைத் தொடர்ந்து வருவதால் இறுதியில் உள்ள உகரம் **இடைத்தொடர்க் குற்றியலுகரம்.**

**எஃகு** – ஃ என்ற ஆய்த எழுத்தைத் தொடர்ந்து வருவதால் இதில் உள்ளது **ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம்.**

**காடு** – தனி நெட்டெழுத்தைத் தொடர்ந்து வருவதால் இது **நெடில் தொடர்க் குற்றியலுகரம்.**

**வரகு** – கு என்பதற்கு முன் உள்ள ர என்ற எழுத்தை ர் + அ என்று பிரிக்கலாம். இவற்றில் உள்ள அ என்ற உயிரைத் தொடர்ந்து வருவதால் இதன் இறுதியில் உள்ள உகரம் உயிர்த் தொடர்க் குற்றியலுகரம்.

[காடு என்பதன் உகரமும் உயிரைத் தொடர்ந்து தான் வருகிறது. எனினும் அதை உயிர்த்தொடர் என்பதில்லை. அந்த உயிர் தனி நெடிலாய் இருப்பதால் நெடில் தொடர் எனப்படும். ஆர்க்காடு என்பது போல் பல எழுத்துகளை அடுத்துவரும் உயிர் நெடிலாய் இருந்தாலும் அது உயிர்த்தொடர் எனப்படும்.]

## *12. சொல் வகை*

***'கந்தன் இலையில் படைத்த உணவைச் சால உண்டு உறங்கினான்'*** என்ற சொற்றொடரில் உள்ள, கந்தன், இலை, உணவு ஆகியவை **பெயர்ச் சொற்கள்.**

படைத்த, உண்டு, உறங்கினான் ஆகியவை **வினைச் சொற்கள்.**





[இலை] இல், [உணவு]ஐ ஆகியவை பெயரும் ஆகாமல், வினையும் ஆகாமல் அவற்றை இடமாகக் கொண்டு வருவதால் **இடைச் சொற்கள்.**

சால என்பது மிகுதியாக என்னும் பண்பை உணர்த்தி வருவதால் **உரிச்சொல்.**

இங்ஙனம் தமிழில் உள்ள எல்லாச் சொற்களும் பெயர், வினை, இடை, உரி என நான்கு வகையில் அடங்கும்.

கந்தன் என்ற பெயர் உயர்வாகிய மக்கட் பெயர் ஆகையால் **உயர்திணை.**

இலை, உணவு என்ற பெயர்கள் உயர்வல்லாத பொருள்களை உணர்த்துவதால் **அஃறிணை.**

உறங்கினான் என்பது முடிந்த வினை ஆகையால் **வினைமுற்று** எனப்படும்.

படைத்த என்பது முடியாமல் உள்ள குறை வினை. அது உணவு என்ற பெயரைக் கொண்டு முடிவதால் **பெயரெச்சம்** எனப்படும்.

உண்டு [சாப்பிட்டு]என்பதும் குறைவினை தான். ஆனால் இது உறங்கினான் என்னும் வினையைக் கொண்டு முடிவதால் **வினையெச்சம்** எனப்படும்.

இல், ஐ என்ற இடைச் சொற்கள் தாம் சேர்ந்த இலை, உணவு ஆகிய பெயர்களின் பொருளை வேறுபடுத்துவதால் வேற்றுமை உருபுகள் எனப்படும். இவற்றைப் போல் இன்று வழங்கி வரும் சில வேற்றுமை உருபுகளைத் தெரிந்து கொள்வோம் :

## 13. வேற்றுமை உருபுகள்

**இரண்டாம் வேற்றுமை உருபு** : ஐ. (வீட்டைக் கட்டினான்)

**மூன்றாம் வேற்றுமை உருபுகள்** : ஆல், ஒடு, உடன், கொண்டு. (வாளால் வெட்டு, என்னோடு வா, அவனுடன் போ, கண்கொண்டு பார்).

**நான்காம் வேற்றுமை உருபு** : கு. (இல்லார்க்குக் கொடு)

**ஐந்தாம் வேற்றுமை உருபுகள்** : நின்று, இருந்து (வீட்டினின்று புறப்பட்டான், ஊரிலிருந்து திரும்பு).

**ஆறாம் வேற்றுமை உருபுகள்** : அது, உடைய. (எனது சுவடி, அவனுடைய தூவல்).

**ஏழாம் வேற்றுமை உருபுகள்** : இல், கண், இடை, முன், பின், மேல், கீழ், உள் முதலியன. (வீட்டில் இரு, மலையின்கண் விளக்கு, அவர்களிடைக் கண்டேன், வண்டியின் முன் செல், என்பின் வா, தலை மேல் வை, மரத்தின் கீழ் நில், ஊருள் இல்லை)

## 14. தொடர்கள்

மேற்கண்ட சொற்றொடரைக் 'கந்தன் உண்டான்' என்று சுருக்கி எழுதுவோம். இதில் கந்தன் என்பது எழுவாய் எனப்படும். உண்டான் என்ற சொல் எழுவாயைத் தொடர்ந்து வருகிறது. எனவே இது எழுவாய்த் தொடர் இதுபோல் உள்ள மற்றத் தொடர்களையும் தெரிந்து கொள்வோம்.

கந்தா வா என்பது **விளித்தொடர்.**





| | | |
|---|---|---|
| படைத்த உணவு | – | **பெயரெச்சத் தொடர்.** |
| உண்டு உறங்கினான் | – | **வினையெச்சத் தொடர்.** |
| உறங்கினான் கந்தன் | – | **வினைமுற்றுத் தொடர்.** |
| மற்ற மொழிகள் | – | **இடைச்சொல் தொடர்.** |
| உறுபொருள் | – | **உரிச்சொல் தொடர்.** |
| பாம்பு பாம்பு | – | **அடுக்குத் தொடர்.** |

தேனைக் குடித்தான் – இதில் ஐ என்ற இரண்டாம் வேற்றுமை உருபு வெளிப்படையாக வருவதால் இது **இரண்டாம் வேற்றுமைத் தொடர்.** இதுபோல் மற்ற வேற்றுமைகளிலும் தொடர் வரும்.

## 15. தொகைகள்

'தேனைக் குடித்தான்' என்பது 'தேன் குடித்தான்' என்றும் வரும். இதில் ஐ உருபு மறைந்து வருவதால் இது **இரண்டாம் வேற்றுமைத் தொகை** எனப்படும். இதுபோல் மற்ற வேற்றுமைகளிலும் தொகை வரும்.

'இடுகாடு' என்பது, குறிப்பிட்ட ஒரு காலத்தைக் காட்டாமல் இட்ட காடு, இடுகின்ற காடு, இடும் காடு என இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்ற 3 காலத்துக்கும் பொதுவாகி ஒட்டி ஒரு சொல் போல் வருவதால் வினைத்தொகை எனப்படும். வினைத் தொகைகளில் முன்னே வினையும், பின்னே பெயரும் அமைந்திருக்கும்.

'கருங்குரங்கு' என்பது முன்னே பண்புப் பெயரும் பின்னே பொருட் பெயருமாக ஒட்டி ஒரு சொல் போல

வருவதால் **பண்புத் தொகை** எனப்படும்.

'கயல் விழி' என்பது கயல் என்ற உவமை முன்னும், விழி என்ற பொருள் பின்னுமாய், போன்ற என்ற உவம உருபு மறைந்து ஒட்டி ஒரு சொல் போல வருவதால் **உவமத் தொகை** எனப்படும்.

'காலை மாலை' என்பது காலையும் மாலையும் என்று வாராமல் உம் என்ற இடைச் சொற்கள் மறைந்து ஒரு சொல்லாக நடப்பதால் உம்மைத் தொகை எனப்படும்.

'குறுந்தாடி' [வந்தான்] என்பது குறுமையான தாடி என்று பண்புத் தொகையாக இருந்தாலும், அது தாடியை உணர்த்தாமல் தாடிஉடைய ஒருவனை [தாடி அல்லாதவேறு மொழிப் பொருளை] உணர்த்துவதால் இது அன்மொழித் தொகை எனப்படும். [அல்மொழி – அல்லாத மொழி].

இதுவரை நாம் பார்த்த இலக்கணங்கள் எல்லாம் புணர்ச்சி விதிகளை விளங்கிக் கொள்வதற்கே. அதனால் அவற்றை நன்கு தெரிந்து கொண்டு இன்றியமையாத புணர்ச்சி விதிகள் சிலவற்றைப் பார்ப்போம்:

## *16. புணர்ச்சி விதிகள்*

அதற்கு முன் ஒரு விளக்கம் : 'தமிழ் படி' என்று இரண்டு சொற்களும் எந்த வேறுபாடும் இல்லாமல் இருந்தபடியே புணர்வது **இயல்பு புணர்ச்சி** எனப்படும்.

வாழை+பழம் = 'வாழைப்பழம்' என்று இடையில் எழுத்து மிகுந்தோ,





பொன்+குடம் = பொற்குடம் என்று இடையில் எழுத்துத் திரிந்தோ,

மரம்+வேர் = மரவேர் என்று இடையில் எழுத்துக் கெட்டோ வருவன **விகாரப் புணர்ச்சி** எனப்படும்.

## *17. இன்றியமையாத புணர்ச்சி விதிகள் :*

1. **வினைத் தொகை, உம்மைத் தொகை, எழுவாய்த் தொடர், விளித்தொடர், வினைமுற்றுத் தொடர், பெயரெச்சத் தொடர்கள் இயல்பு புணர்ச்சியாக இருக்கும்.**

காட்டு : **வினைத்தொகை** – விரிகதிர், செய்தொழில், வளர்புகழ், தின்பண்டம்.

**உம்மைத்தொகை** – தலை கால், வில் புலி கயல், தாய் சேய், கால் கை.

**எழுவாய்த் தொடர்** – புலி பாயும், குயில் கூவும், பொருள் பெரிது, மான் சென்றது.

**விளித்தொடர்** – மகனே படி, தங்காய் பாடு, அன்பே சொல், மக்காள் செல்க.

**வினைமுற்றுத் தொடர்** – தின்றன குதிரைகள், வருக பெரியீர், வந்தது புலி, வாராய் தம்பி.

**பெயரெச்சத் தொடர்** – வந்த பையன், வாராத கடன், கண்ட காட்சி, கொள்ளும் பொருள்.

2. **வேற்றுமைத்தொகை, பண்புத்தொகை, உவமைத் தொகைகள் விகாரப் புணர்ச்சியாக இருக்கும்.**

காட்டு : **வேற்றுமைத்தொகை** – புலிப்பால், மரக்கொம்பு, தேர்த்தட்டு, பாற்குடம்.

**பண்புத்தொகை** – தைத்திங்கள், வட்டக்கல், வறட்டாடு, அருட்செல்வம்.

**உவமைத்தொகை** – முல்லைப்பல், வேற்கண், வேய்த்தோள், பொற்சுணங்கு.

## *18. வலி மிகும் இடங்களிற் சில*

3. **ஐ, கு ஆகிய வேற்றுமை உருபுகளின் முன் வரும் வல்லினம் மிகும்.**

கா: குறளைப்படி, புலவர்க்குக்கொடு.

4. **அ, இ, எ, அந்த, இந்த, எந்த, அங்கு, இங்கு, எங்கு, ஆங்கு, ஈங்கு, யாங்கு ஆகியவற்றின் முன் வரும் வல்லினம் மிகும்.**

கா : அப்பாட்டு, இச்சுவடி, எத்துணை, அந்தக்காட்சி, இந்தச் செய்யுள், எந்தத்துறை?, அங்குக் கண்டேன், இங்குப் பார், எங்குச் செல்வேன்? ஆங்குத் தேடு, ஈங்குக்காண், யாங்குக் கற்றாய்?

5. **வினைத்தொகை ஒழிந்த வன்றொடர்க் குற்றியலு கரத்தின் முன் வல்லினம் மிகும்.**

கா : கொக்குப் பறக்கும், எடுத்துக் கொடு, கீற்றுக்கழி, சுக்குத் தின்றான், கூவிற்றுக் கோழி, [வினைத் தொகையில் மட்டும் ஈட்டு புகழ், கூப்பு கைகள் என இயல்பாகும்]

6. **அ, இ, ய் என்ற இறுதிகளை உடைய வினையெச் சங்களின் முன் வலி மிகும்.**

கா : செய்யச் சொன்னான், எழுதிக் கேள், போய்ப் பார்.





7. **[செய்யாத என்பது செய்யா என்று வருகின்ற] ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சங்களின் முன் வலி மிகும்.**

கா : செல்லாக்காசு, உதவாப்பிள்ளை.

8. **ஆ, ஈ, ஊ என்னும் ஈற்று அஃறிணைப் பெயர்களின் முன் வரும் வல்லினம் மிகும்.**

கா : நிலாப் புறப்பட்டது, தீப்பரவியது, பூப்பூத்தது.

9. **மற்ற, இனி, முன்னர், பின்னர் என்ற சொற்களின் முன் வலி மிகும்.**

கா : மற்றப் பொருள், இனிக் காண்போம், முன்னர்ப் பார்த்தோம், பின்னர்ச் சொல்வேன்.

10. **கிலோ, மில்லி, இலிட்டர், மீட்டர் என்ற சொற்களின் முன்வரும் வல்லினம் மிகும்.**

கா : ஒரு கிலோப் பயறு, நூறு மில்லிப் பால், ஓரிலிட்டர்த் தண்ணீர், மூன்று மீட்டர்த் துணி.

## *19. வலி மிகா இடங்களிற் சில*

11. **அகரவீற்றுப் பெயரெச்சத்தின் முன் வலி மிகாது.**

கா : கற்ற கல்வி, நல்ல தம்பி.

12. **உயிர்த்தொடர், மென்றொடர், இடைத்தொடர்க் குற்றியலுகர வீற்று வினையெச்சங்களின் முன் வலி மிகாது.**

கா : அழுது சொன்னான், நடந்து போ, பெய்து கெடுத்தது.

**13. ஒடு, நின்று, இருந்து, அது, உடைய ஆகிய வேற்றுமை உருபுகளின் முன் வலி மிகாது.**

கா : அவனோடு போ, வீட்டினின்று புறப்படு, ஊரிலிருந்து திரும்பினான், எனது கை, உன்னுடைய பை.

**14. இரண்டாம் வேற்றுமை, ஏழாம் வேற்றுமைத் தொகைகளில் வருமொழி வினையாயின் வலிமிகாது.**

கா : கனி தின்றான், வாய் புகுந்தது.

**15. உயர்திணைப் பெயர்களின் முன் வலி மிகாது.**

கா : தம்பி சுவடி, அவர் பொருள்.

**16. ஆ, ஏ, ஓ, ஆகிய இடைச் சொற்களின் முன் வலி மிகாது.**

கா : நானா சொன்னேன்? யானே கள்வன், இவனோ திருடன்?

**17. படி என்னும் இடைச்சொல் வினையை அடுத்துவரின் அதன் முன் வலி மிகாது.**

கா : சொன்னபடி செய், வரும்படி கூறு.

**18. எட்டு, பத்து அல்லாத எண்ணுப் பெயர் முன் வலி மிகாது.**

கா : ஒரு கை, இரண்டு கால், இருதலை, மூன்று காலம், நான்கு திசை, ஐந்து திணை, ஆறு தலை, அறு படை, ஏழு கடல், எழு பிறப்பு, ஏழ் துளை, ஒன்பது கோள், நூறு பாட்டு.

**19. அன்று, இன்று, என்று, பண்டு ஆகிய சொற்களின் முன் வலி மிகாது.**





கா : அன்று கண்டான், இன்று சொல், என்று தணியும்?, பண்டு சொன்னார்.

**20. தனை, அளவு, வாளா, சும்மா, அடிக்கடி, தடவை, முறை, ஆவது, முன்பு, பின்பு, பிறகு, போது என்னும் சொற்களின் முன் வலி மிகாது.**

கா : எத்தனை சொன்னாலும், அவ்வளவு புகழ், வாளா கிட, சும்மா சொல், அடிக்கடி போ, ஒரு தடவை செல், பல முறை கேள், பாலாவது தேநீராவது, முன்பு செய்தாய், பின்பு பார், பிறகு சொல், அப்போது கேள்.

மேற்கண்ட புணர்ச்சி விதிகள் பெரும்பான்மை நோக்கின. இவற்றில் மிகச்சில விலக்குகள் உண்டு. எனினும் இந்த 20 புணர்ச்சி விதிகளையும் பின்பற்றி எழுதினால் 80 விழுக்காடு பிழையில்லாமல் எழுதலாம்.

## *20. மேலும் சில புணர்ச்சி விதிகள்*

**21. இ, ஈ, ஏ, ஐ ஆகிய உயிர்களின் முன் உயிர் வந்தால் இடையில் ய் தோன்றும். ஏனை உயிர்களின் முன் உயிர் வந்தால் வ் தோன்றும். இந்த யகர வகரங்கள் உடம்படு மெய் எனப்படும்.**

கா :கிளி + அழகு – கிளி+ய்+அழகு = கிளியழகு
தீ + எரிந்தது – தீ+ய்+எரிந்தது = தீயெரிந்தது
இவனே+அவன்–இவனே+ய்+அவன்= இவனேயவன்
மலை + ஆடு – மலை+ய்+ஆடு = மலையாடு
இ, ஈ, ஏ, ஐ முன் ய் வந்தது.

பல + அணி – பல+வ்+அணி = பலவணி
பலா + இலை – பலா+வ்+இலை = பலாவிலை

திரு + அடி – திரு+வ்+அடி = திருவடி

பூ + இதழ் – பூ+வ்+இதழ் = பூவிதழ்

ஏனைய உயிர்களின் முன் வ் வந்தது.

22. **குற்றியலுகரம் தன் முன் உயிர் வரும் போது மெய்யெழுத்துப் போல், வரும் உயிரோடு புணரும்; உடம்படுமெய்தோன்றாது.**

கா : மாடு + இல்லை = மாடில்லை.

23. **தனிக்குறிலை அடுத்த மெய்கள், உயிர் வரும் போது இரட்டும்.**

கா : கல் + அடி –கல்ல் + அடி = கல்லடி

24. **உயர்திணைப் பெயர் வினைகளின் இறுதி மெய்கள் வல்லினம் வரின் திரியா.**

கா : அவன் பேச்சு, கண்டாள் கண்ணகி.

25. **நெடில் தொடர், உயிர்த் தொடர்க் குற்றியலு கரங்கள் ஏறிய ட ற ஒற்றுகள் வேற்றுமையில் இரட்டும்.**

கா : ஆடு + கால் – ஆட்டுக்கால், வயிறு + பசி = வயிற்றுப்பசி.

## *21. பிழையாக வழங்கப்படும் சில சொற்களின் திருத்தமான வடிவங்கள்*

| | | |
|---|---|---|
| அக்காள் | – | தமக்கை, அக்கை |
| அஞ்சலப்பெட்டி | – | ஐந்தறைப் பெட்டி |
| அடையார் | – | அடையாறு |
| அண்ணாக்கயிறு | – | அரைஞாண் |
| அண்ணார் | – | அண்ணன் |





| | | |
|---|---|---|
| அதுவல்ல | – | அதுவன்று |
| அதைப் பொருத்தது | – | அதைப் பொறுத்தது |
| அப்பங்காரன் | – | அப்பன் |
| அப்பார் | – | அப்பன், தந்தையார் |
| அம்மாள் | – | அம்மை |
| அமக்களம் | – | அமர்க்களம் |
| அமிஞ்சி | – | அழுமூஞ்சி |
| அரசுப்பேருந்து | – | அரசுபேருந்து |
| அருகாமை | – | அருகில் |
| அலமேலு | – | அலர்மேல் |
| அவர்தன் | – | அவர்தம் |
| அவாள் | – | அவர்கள் |
| அவைகள் | – | அவை |
| அறுவெறுப்பு | – | அருவருப்பு |
| ஆம்பிளப்பிள்ளை | – | ஆண்பிள்ளை |
| 6–வது | – | 6 ஆவது |
| இடதுபுறம் | – | இடப்புறம் |
| இடைபோடு | – | எடை போடு |
| இயக்குனர் | – | இயக்குநர் |
| இரு உடல் | – | ஈருடல் |
| இருபத்திமூன்று | – | இருபத்து மூன்று |
| உண்டை | – | உருண்டை |
| உந்தன் | – | உன்றன் |
| எண்ணை | – | எண்ணெய் |
| எந்தன் | – | என்றன் |
| எம்பளது | – | எண்பது |
| எனது மனைவி | – | என் மனைவி |
| ஏழ்மை | – | ஏழைமை |
| ஏற்கனவே | – | ஏற்கெனவே |

| | | |
|---|---|---|
| 5–ம் நாள் | – | 5 ஆம் நாள் |
| ஒண்டியாய் | – | ஒன்றியாய் |
| ஒரு உயிர் | – | ஓருயிர் |
| ஒருவள் | – | ஒருத்தி |
| ஓட்டுனர் | – | ஓட்டுநர் |
| கண்ட்ராவி | – | கண்ணராவி |
| கம்மநாட்டி | – | கைம்பெண்டாட்டி |
| களவாணி | – | களவாளி |
| கார்க்க வேண்டும் | – | காக்க வேண்டும் |
| காலாற நட | – | காலார நட |
| குருக்கள்மார்கள் | – | குருமார் |
| கேடயம் | – | கெடகம் |
| கை மற்றும் கால் | – | கைகால் (அ) கையும் காலும் |
| கொப்பளம் | – | கொப்புளம் |
| கோர்வை | – | கோவை |
| கோறுகிறேன் | – | கோருகிறேன் |
| சாக்கடை | – | சாய்கடை |
| சில்லரை | – | சில்லறை |
| சிலவு | – | செலவு |
| சீக்காய் | – | சீயக்காய் |
| சுடத்தண்ணீர் | – | சுடுநீர், வெந்நீர் |
| சுண்ணாம்பார் | – | சுண்ணாம்பாறு |
| செத்த இரு | – | சற்று இரு |
| சேதி | – | செய்தி |
| சோமாறி | – | சோம்பேறி |
| ஜாமந்தி | – | செவ்வந்தி |

தக்க வைத்துக் கொண்டார்–தங்க வைத்துக் கொண்டார், நிலைநிறுத்திக் கொண்டார்

| | | |
|---|---|---|
| தங்காள் | – | தங்கை |
| தமிழ்நாடு அரசு | – | தமிழ் நாட்டரசு |





| | | |
|---|---|---|
| தலகாணி | – | தலையணை |
| தலா ஒன்று | – | தலைக்கு ஒன்று |
| தவக்களை | – | தவளை |
| தாவாரம் | – | தாழ்வாரம் |
| திகட்டியது | – | தெவிட்டியது |
| திருநிறைச் செல்வன் | – | திருநிறை செல்வன் |
| திருவையார் | – | திருவையாறு |
| தின்மை | – | தீமை |
| தெவல | – | தாவில்லை |
| தேனீர் | – | தேநீர் |
| நஞ்சை | – | நன்செய் |
| நடத்துனர் | – | நடத்துநர் |
| நாத்தனார் | – | நாத்தூணார் |
| நிகளம் | – | நீளம் |
| பச்சைத்தண்ணீர் | – | தண்ணீர் |
| பதனி | – | பதநீர் |
| பழவம் | – | பவழம் |
| பாலார் | – | பாலாறு |
| பாவக்காய் | – | பாகற்காய் |
| புஞ்சை | – | புன்செய் |
| பேச்சு வார்த்தை | – | பேச்சு |
| பொம்பிளைப் பிள்ளை | – | பெண்பிள்ளை |
| மசி | – | மை |
| மாங்காப்பழம் | – | மாம்பழம் |
| மாங்கா மரம் | – | மாமரம் |
| மானம் பாத்த | – | வானம் பார்த்த |
| மானா வாரி | – | வானா வாரி |
| முந்தாணி | – | முன்றானை |
| முப்பெரும் விழா | – | முப்பெருவிழா |

| | | |
|---|---|---|
| முயற்சித்தான் | — | முயன்றான், முயற்சி செய்தான் |
| மொகனை | — | மோனை |
| 3—ல் | — | 3இல் |
| ரொம்ப | — | நிரம்ப |
| வயிறாற உண் | — | வயிறார உண் |
| வலது புறம் | — | வலப்புறம் |
| வாக்கப்பட்டாள் | — | வாழ்க்கைப்பட்டாள் |
| வாய்வு | — | வாயு |
| வியாழன் | — | வியாழம் |
| வெங்கடேசன் | — | வேங்கடேசன் |
| வெந்நிதண்ணி | — | வெந்நீர் |
| வேஷ்டி | — | வேட்டி |

## 22. போலிகள்

[இரண்டு வடிவங்களையும் பயன்படுத்தலாம்]

| | | |
|---|---|---|
| அறம் | — | அறன் |
| உலவு | — | உலாவு |
| ஐயர் | — | அய்யர் |
